மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்றச் சங்கம்

# (பதிவு எண். 605/MDS, பேரவை இணைப்பு எண். 287) நிர்வாகிகள் தேர்தல்!

தொ.மு.ச. பேரவை அறிவிப்பு!

**தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்றச் சங்கத்தின் (பதிவு எண். 605/ MDS, பேரவை இணைப்பு எண். 287) நிர்வாகிகள் தேர்தல், வழக்கறிஞர் அ. சரவணன் (தணிக்கைக் குழு உறுப்பினர், தி.மு.க.) அவர்கள் தலைமை தேர்தல் ஆணையாளராக நியமிக்கப்பட்டு, பணிமனை வாரியாக தலைமைக் கழகத்தால் நியமிக்கப்படும் ஆணையாளரைக் கொண்டு பணிமனைத் தேர்தல் நடைபெறும். அதனையடுத்து மத்திய சங்க நிர்வாகிகள் தேர்தல் கீழ்கண்டவாறு நடைபெறும்.**

**தேர்தல் கால அட்டவணை பணிமனை நிர்வாகிகள் தேர்தல்**

வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுதல்- 03.03.2025 காலை 10.00மணி (பணிமனைகள் தோறும்)
வாக்காளர் பட்டியல் சரி பார்த்தல் - 06.03.2025
காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை
இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் - 10.03.2025 காலை 10.00 மணி (பணிமனைகள் தோறும்)
வேட்புமனு படிவம் வழங்குதல் - 15.03.2025
காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை
வேட்புமனு தாக்கல் - 17.03.2025
காலை 10.00 மணி முதல் 5.00 மணி வரை
வேட்புமனு பரிசீலனை - 18.03.2025
காலை 10.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை
தகுதியான வேட்பாளர் பட்டியல் வெளியிடுதல் - 19.03.2025 காலை 10.00 மணி
வேட்புமனு திரும்பப் பெறுதல் - 19.03.2025
காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை
இறுதி வேட்பாளர்கள் பட்டியல் வெளியிடுதல் - 20.03.2025 காலை 11.00 மணி
வாக்குப் பதிவு - 22.03.2025
காலை 6.00 மணி முதல்மாலை 6.00 மணி வரை

பணிமனை நிர்வாகிகள் தேர்தலுக்கான வேட்புமனு படிவம் வழங்குதல், வேட்புமனு தாக்கல், பரிசீலனை, இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடுதல் ஆகியவை அந்தந்த பணிமனைகளில் வாக்குகள் எண்ணப்பட்டு உடனே முடிவுகள் அறிவிக்கப்படும் ஆணையாளரின் முடிவே இறுதியானது.

**மத்திய சங்க நிர்வாகிகள் தேர்தல்**

வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் - 23.03.2025 காலை 10.00 மணி (பணிமனை செயலாளர், பொதுக்குழு உறுப்பினர்கள்)
வேட்புமனு படிவம் வழங்குதல் - 24.03.2025
காலை 9.00 மணி முதல் 10.00 மணி வரை
வேட்புமனு தாக்கல் - 24.03.2025
காலை 11.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை
வேட்புமனு பரிசீலனை - 25.03.2025
காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை
தகுதியான வேட்பாளர் பட்டியல் வெளியிடுதல் - 25.03.2025 மாலை 3.00 மணி
வேட்புமனு திரும்பப் பெறுதல் - 26.03.2025
காலை 10.00 மணி முதல் பகல் 11.00 மணி வரை
இறுதி வேட்பாளர்கள் பட்டியல் வெளியிடுதல் - 26.03.2025 மாலை 3.00 மணி
வாக்குப் பதிவு - 27.03.2025
காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை

மத்திய சங்கத் தேர்தல் வாக்காளர் பட்டியல் வெளிடுதல், வேட்புமனு படிவம் வழங்குதல், வேட்புமனு தாக்கல், பரிசீலனை, இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடுதல்,வாக்குப்பதிவு, வாக்கு எண்ணிக்கை, முடிவு அறிவித்தல் ஆகியவை தி.மு.க. தலைமை அலுவலகமான, அண்ணா அறிவாலயத்தில் நடைபெறும்.
ஆணையாளரின் முடிவே இறுதியானது.

**குறிப்பு** : மண்டலந்தோறும் தலைமைக் கழக மேலிட பார்வையாளர்கள் மற்றும் பணிமனை வாரியாக தேர்தல் ஆணையாளர்கள் தலைமைக் கழகத்தால் பின்னர் அறிவிக்கப்படும்.

சென்னை-18 **(மு. சண்முகம்)**
நாள்- 26.02.2025 பொதுச் செயலாளர், தொ.மு.ச. பேரவை

## தென்காசி தெற்கு மாவட்ட விவசாயத் தொழிலாளர் அணி நிர்வாகிகள் கூட்டம்!

*தென்காசி, பிப்.28-*

*தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நடந்தது.*

*கூட்டத்திற்கு தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமை வகித்தார்.*

*மாவட்ட விவசாயத் தொழிலாளர் அணி அமைப்பாளர் கோமதிநாயகம் வரவேற்றார். மாவட்ட துணை அமைப்பாளர்கள் வி.டி. எம்.அலி,கணபதி, கருணாநிதி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் மாநில விவசாயத் தொழிலாளர் அணி இணைச் செயலாளரும், ஆலங்குளம் சட்டமன்ற தொகுதி பார்வையாளருமான கணேஷ்குமார் ஆதித்தன் ஆலோசனைகளை வழங்கி உரையாற்றினார்.*

*கூட்டத்தில் வரும் மார்ச் 1ம் தேதி தலைவர் மு.க. ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு பொதுமக்கள் பயன் பெறும் வகையில் நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பாக கொண்டாடுவது.*

*தென்காசி மாவட்டத்திற்கு வளர்ச்சி திட்ட பணிகள் துவக்க விழா, ஆய்வு மற்றும் அடிக்கல் நாட்டு விழாவிற்கு விரைவில் வருகை தரும் தமிழக முதல்வருக்கு சிறப்பான வரவேற்பு அளிப்பது.*

*வரும் 2026 சட்டமன்ற தேர்தலில் தலைவர் மு.க. ஸ்டாலின் அரசின் சாதனைகளை பொதுமக்களிடம் எடுத்துக் கூறி 234 சட்டமன்ற தொகுதிகளிலும் தி.மு.க. கூட்டணி வெற்றி பெற அயராது உழைக்க வேண்டும். தமிழ்நாட்டில் இந்தி திணிப்பை ஏற்படுத்த முயலும் ஒன்றிய பா.ஜ.க அரசை வன்மையாக கண்டிப்பது.*

*234 தொகுதிகளிலும் தலைவரின் ஓயாது உழைப்பின் மூலம் சிறப்பாக மக்கள் நலத் திட்டங்களை மக்களுக்கு கொண்டு செல்லும் வகையில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அயராது உழைப்பு மற்றும் செயல்பாடுகளை பாராட்டி வாழ்த்துக்களை தெரிவிப்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.*

*மாவட்ட விவசாயத் தொழிலாளர் அணி தலைவர் பாலாமணி நன்றி கூறினார்.*



## தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்புகளுக்கு, இளைஞர் அணி அமைப்பாளர்–துணை அமைப்பாளர்களை மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாவட்ட வாரியாக நியமித்து வருகிறார்.

மண்டலம்–2 க்கு உட்பட்ட மாவட்டங்களில் நியமிக்கப்பட்ட இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், அந்தந்த மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற்று வருகிறது. மூன்றாம் கட்டமாக கள்ளக்குறிச்சி தெற்கு மற்றும் கள்ளக்குறிச்சி வடக்கு ஆகிய மாவட்டங்களில் நடைபெறும் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 02.03.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 9.00 மணி | கள்ளக்குறிச்சி தெற்கு | கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழக அலுவலகம், தியாகதுருகம் பிரதான சாலை, கள்ளக்குறிச்சி. |
| | மாலை 4.00 மணி | கள்ளக்குறிச்சி வடக்கு | கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டக் கழக அலுவலகம், ராஜா நகர், கள்ளக்குறிச்சி. |

**அன்பகம்**
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 26-02-2025





திருச்சி மாநகராட்சி, 43வது வார்டு,காவேரி நகரில் வார்டு மாமன்ற அலுவலகம் மற்றும் சுகாதார ஆய்வாளர் அலுவலகம் கட்டும் பணிகளை வார்டு கவுன்சிலரும் தி.மு.கழக மாநில இலக்கிய அணி புரவலருமான வழக்கறிஞர் ந. செந்தில் தொடங்கி வைத்தார். உடன் பகுதி செயலாளரும், சுகாதார குழு தலைவருமான ஓ.நீலமேகம் மற்றும் நிர்வாகிகள் கோவிந்தராஜ், கார்த்திக், அன்பழகன், குமார், தமிழரசன், சின்னதுரை, காண்டிராக்டர் விசுவநாதன், காவேரி நகர் நலச்சங்க நிர்வாகிகள் உள்ளனர்.


மூன்றாம் ஆண்டு

# நினைவு அஞ்சலி

வடவூர். **ப.பழனிவேல்** அவர்கள்
நாகை முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர்

—— நினைவு நாள் : 28.02.2025 ——

தோற்றம் : 02.09.1940 | மறைவு : 28.02.2022

நீங்கள் காட்டிய கலைஞரின் பாதையில்
கழகத்தலைவரின் வழியில்
சின்னவர் அவர்தம் கரங்களுக்கு வலுசேர்க்க
தொடர்ந்து பயணிப்போம் !

*என்றும் உங்கள் நினைவில்*

**வடவூர். க.ராஜேந்திரன்**
ஒன்றிய கழக செயலாளர்
தலைமை செயற்குழு உறுப்பினர்,



DHARUN Digital 9842038805

## நாகை தெற்கு ஒன்றிய தி.மு.க